




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VOLUME : 01 | ISSUE: 243 | 25.2.2026 | WEDNESDAY | MAASI : 13 | PRICE : RS.5/- |
| மலர் : 01 | இதழ் : 243 | 25.2.2026 | புதன்கிழமை | மாசி : 13 | விலை : ரூ.5/– |


## ஒவ்வொரு குடும்பத்துக்கும்

# "ரூ.10,000 கருணைத் தொகை"

## "தென்னக ரயில்வே மெத்தனம்..."

### சென்னை புறநகர் ரயில் சேவை பாதிப்பு குறித்து கனிமொழி எம்.பி கருத்து



சென்னை: பிப்.25-

"கடந்த சில நாட்களாக சென்னை புறநகர் பயணிகள் ரயில் சேவை ரத்து செய்யப்பட்டு வருவதும், அதனால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாவதும் வேதனையளிக்கிறது" என கனிமொழி எம்.பி தெரிவித்துள்ளார்.

சென்னை தாம்பரம் ரயில் நிலையத்தில் நடைமேடை மறுசீரமைப்பு பணிகள் காரணமாக புறநகர் மின்சார ரயில் சேவை கடந்த சில நாள்களாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். இந்த நிலையில் புறநகர் மின்சார ரயில் இயக்கத்தில் சில மாற்றங்களை செய்திருப்பதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து கனிமொழி எம்.பி தனது எக்ஸ் பக்கத்தில், "நாள்தோறும் லட்சக்கணக்கானவர்கள் பயன்படுத்தும் சென்னை கடற்கரை செங்கல்பட்டு வழித்தடத்தில் கடந்த சில நாட்களாக பயணிகள் ரயில் சேவை ரத்து செய்யப்பட்டு வருவதும், அதனால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாவதும் வேதனையளிக்கிறது.

ஏற்கெனவே 40 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், இன்றும் 49 புறநகர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டிருப்பது, அன்றாடம் பணிக்குச் செல்வோர் தொடங்கி பள்ளி, கல்லூரி மாணவர்கள் வரை கடும் மனவுளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளது.

குறிப்பாக வரும் வாரங்களில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் தொடங்கவுள்ள நிலையில், தென்னக ரயில்வே மெத்தனமாக செயல்படாமல் இப்பிரச்சனைக்கு விரைந்து தீர்வு காண வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அதிமுக 3ம் கட்ட தேர்தல்

# வாக்குறுதியை அறிவித்தார் பழனிசாமி

சென்னை: பிப்.25-

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் கருணைத் தொகை வழங்கப்படும் என்பது உள்ளிட்ட 6 வாக்குறுதிகளை அதிமுக மூன்றாம் கட்டமாக வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 2 கட்ட வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று (பிப்.24) 3ம் கட்ட வாக்குறுதிகளை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

அந்த வாக்குறுதிகள் குறித்து அதிமுக வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:

1. ஸ்டாலின் தலைமையிலான நிர்வாகத் திறனற்ற விடியா திமுக ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி விஷம்போல் ஏறி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், சொத்து வரி, வீட்டு வரி, மின்சார கட்டணம், குடிநீர் வரி போன்ற பல வரிகளும் உயர்த்தப்பட்டுவிட்டது. இதனால்,



மக்களின் அன்றாட குடும்பச் சுமை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. எனவே, மக்களின் சுமையை குறைக்கும் வகையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் கருணைத் தொகையாக 10,000 ரூபாய் வழங்கப்படும்.

2. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் 2,000 ரூபாயும்; +2 வரை படித்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும்.

3. மீன்பிடி தடைக் காலங்களில் மீனவர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை 8,000 ரூபாயில் இருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

4. ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கல் அன்று வழங்கப்பட்டு வரும் பொங்கல் தொகுப்புடன் சேர்த்து 1,000 ரூபாய் வழங்கப்படும்.

5. கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 450 யூனிட்டாகவும்; விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட்டில் இருந்து 1,400 யூனிட்டாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

6. நகரப் பகுதிகளில் நடைபாதை ஓரமாக கடை வைத்திருக்கும் சிறு வியாபாரிகள், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதியில் * முதியோர் உள்ளிட்டவர்களுக்கான ஓய்வூதியங்கள் ரூ. 2,000மாக உயர்வு

* வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி

* வாழ்வாதார உதவியாக, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும்

* ஜல்லிக்கட்டில் உயிரிழந்தால் நிவாரணம்

* சிறுபான்மையினருக்கான அறிவிப்புகளாக, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் ஏனைய சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயதொழில் தொடங்குவதற்கு வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும், ஆகிய வாக்குறுதிகள் இடம்பெற்றிருந்தது நினைவுகூரத்தக்கது.






# சென்னை மாவட்டத்தில் 28.30 லட்சம் வாக்காளர்கள்: 11.74 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்

சென்னை, பிப்.25-
சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிப்பிரதிநிதிகளின் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் ரிப்பன் மாளிகையில் நேற்று வெளியிட்டார்.

சென்னை மாவட்டத்தில் 4,079 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இந்த இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில், 13,65,763 ஆண், 14,64,344 பெண், 829 இதரர் என மொத்தம் 28,30,936 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு அக்.27ம் தேதி நிலவரத்துடன் ஒப்பிடும்போது, 11,73,758 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். வரைவு வாக்காளர் பட்டியலுடன் ஒப்பிடும்போது, 2,51,260 வாக்காளர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறுதி பட்டியலில் 1,27,418 ஆண் வாக்காளர்களும், 1,43,053 பெண் வாக்காளர்களும், 829 இதர வாக்காளர்களும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்தில் குறைந்தபட்சமாக துறைமுகம் தொகுதியில் 1,16,896 வாக்காளர்களும், அதிகபட்சமாக பெரம்பூர் தொகுதியில் 2,22,792 வாக்காளர்களும் உள்ளனர்.

இந்த இறுதி வாக்காளர் பட்டியல்கள் மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களிலும், அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும், பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

இதை பொதுமக்கள் பார்வையிட்டு தங்களது பெயர் மற்றும் குடும்பத்தாரின் பெயர்கள் குறித்த விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம். அதிகபட்சமாக வேளச்சேரி தொகுதியில் 314 வாக்குச்சாவடி மையங்களும், குறைந்தபட்சமாக துறைமுகம் தொகுதியில் 192 வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இறுதி வாக்காளர் வெளியீட்டு நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் க.கற்பகம், வீ.ப.ஜெயசீலன், ம.பிரதிவிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஏர் ஆம்புலன்ஸுக்காக ரூ.8 லட்சம் கடன் வாங்கிய நோயாளியின் குடும்பம்: ஜார்க்கண்ட் சோகம்

ராஞ்சி, பிப்.25-
ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் இருந்து டெல்லிக்கு நோயாளியை ஏற்றிச் சென்ற ஏர் ஆம்புலன்ஸ் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 7 பேரும் உயிரிழந்தனர். இந்த சோகம் விலகுவதற்குள் விபத்தில் உயிரிழந்த நோயாளியின் குடும்பத்தினர், ஏர் ஆம்புலன்ஸை வாடகைக்கு எடுக்க ரூ.8 லட்சம் கடன் வாங்கியிருந்த துயரமும் தெரியவந்துள்ளது.

ஜார்க்கண்டின் சத்ரா மாவட்டத்தில் இருந்து நேற்று இரவு ஏர் ஆம்புலன்ஸ் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் தீக்காயத்தால் கடும் பாதிப்புக்குள்ளான சஞ்சய், அவரது மனைவி மற்றும் உறவினர் உயிரிழந்தனர். மேலும், டெல்லியைச் சேர்ந்த சார்ட்டர்ட் ரெட்பேர்ட் ஏர்வேஸால் இயக்கப்படும் பீச்கிராஃப்ட் சி90 விமானத்தின் இரண்டு விமானிகள், ஒரு மருத்துவர் மற்றும் ஒரு துணை மருத்துவ நிபுணர் உள்பட 4 பேர் உயிரிழந்தனர். மொத்த உயிர்ப்பலி 7.



இந்த விபத்து குறித்து பேசிய உயிரிழந்த சஞ்சயின் சகோதரர் அஜய், "சஞ்சய்யின் சிகிச்சைக்காக சொத்து மற்றும் நிலத்தை விற்க எங்கள் குடும்பம் நினைத்தது. பின்னர் எங்கள் குடும்பத்தினர் கடன் வாங்கி, நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளிடமிருந்து பணத்தை பெற்று டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனை சிகிச்சைக்கான செலவையும், ஏர் ஆம்புலன்ஸ் வாடகையையும் ஏற்பாடு செய்தோம். இதில் ஏர் ஆம்புலன்ஸுக்காக ரூ.8 லட்சம் கடன் வாங்கியிருந்தோம்" என்றார்.

நடந்தது என்ன? ஜார்கண்ட் மாநிலம் லதேஹர் பகுதியை சேர்ந்த சஞ்சய், கடந்த திங்கட்கிழமை சந்துவாவில் உள்ள அவரது ஹோட்டலில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் படுகாயமடைந்தார். அவரது உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்ததால், குடும்பத்தினர் அவரை உயர்சிகிச்சைக்காக புதுடெல்லியில் உள்ள சர் கங்கா ராம் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடிவு செய்தனர்.

இதற்காக ஏர் ஆம்புலன்சின் சஞ்சய், அவரது மனைவி அர்ச்சனா மற்றும் அவரது உறவினர் துருவ் ஆகியோர் சென்றனர். இவர்கள் மூவரும் உயிரிழந்துவிட்டனர். மேலும், விமானி கேப்டன் விவேக் விகாஸ் பகத் மற்றும் துணை விமானி கேப்டன் சவ்ராஜ்தீப் சிங், மருத்துவர் விகாஸ் குமார் குப்தா மற்றும் துணை மருத்துவர் சச்சின் குமார் மிஸ்ரா ஆகியோரும் உயிரிழந்தனர்.

# அரசு ஸ்டான்லி மருத்துவமனை டீன் அறையில் மேற்கூரை இடிந்து விழுந்து பெண் காயம்

சென்னை, பிப்.25-
அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ராயபுரம் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இங்கு 1,000க்கும் மேற்பட்டோர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.




தினமும் ஆயிரக்கணக்கானோர் புறநோயாளிகளாக சிகிச்சைக்கு வந்து செல்கின்றனர். மருத்துவமனை வளாகத்தில் உள்ள பழமையான கட்டிடங்களை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மருத்துவமனை டீன் அறையின் வரவேற்பு பகுதியில் நேற்று மேற்கூரை திடீரென்று பெயர்ந்து விழுந்ததில், அங்கிருந்த டீனின் உதவியாளர் காவியா என்பவர் காயமடைந்தார். உடனே அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக சேர்த்தனர்.

தகவல் அறிந்து வந்த பொதுப்பணித் துறையினர், அந்த பகுதியில் பொதுமக்கள் யாரும் செல்லாமல் இருக்க தடுப்புகளை வைத்து அடைத்தனர். இது தொடர்பாக மருத்துவமனை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "எப்ஸ்டீன் கோப்புகள், அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் தான் நாட்டுக்கு அவமானம்" மோடிக்கு ராகுல் பதில்

புது டெல்லி, பிப்.25-
காங்கிரஸ் கட்சி அசிங்கமான அரசியலில் ஈடுபடுவதாக பிரதமர் மோடி குற்றம்சாட்டிய நிலையில், எப்ஸ்டீன் கோப்புகளில் பிரதமரின் பெயர் இடம்பெற்றுள்ளது மற்றும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் நலன்களை மத்திய அரசு விற்றது ஆகியவை தான் நாட்டின் அவமானம் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.



இதுபற்றி ராகுல் காந்தி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மோடிஜி, நீங்கள் அவமானத்தைப் பற்றிப் பேசுகிறீர்களா?. அவமானம் என்றால் என்ன என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். எப்ஸ்டீன் கோப்புகளில் உங்கள் பெயர், உங்கள் அமைச்சர் மற்றும் உங்கள் நண்பரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. உங்கள் பெயர்கள் ஒரு மோசமான குற்றவாளியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதுதான் அவமானகரமான விஷயம். நீங்கள் அமெரிக்காவுடன் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தம், அதில் நீங்கள் நாட்டையே விற்றுவிட்டீர்கள், இது வெட்கக்கேடானது.

அமெரிக்காவிடம் நீங்கள் நாட்டின் தரவுகளை ஒப்படைத்துவிட்டீர்கள். நீங்கள் விவசாயிகளை அழித்துவிட்டீர்கள். நீங்கள் ஜவுளித் தொழிலை அழித்துவிட்டீர்கள். இது வெட்கக்கேடானது. அமெரிக்காவில் அதானிக்கு எதிராக நடந்து வரும் வழக்கு உங்களை தூங்கவிடாமல் செய்தது என்பது முழு நாடும் அறிந்ததே. ஏனென்றால் அது பாஜக மற்றும் உங்கள் நிதிக் கட்டமைப்பிற்கு எதிரான வழக்கு. 14 மாதங்களாக, அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அது வெட்கக்கேடானது" என்று தனது பதிவில் குறிப்பிட்டார்.

மேலும் அவர், "மோடிஜி, உங்கள் நண்பர்கள் அனில் அம்பானி, அதானி மற்றும் உங்களுக்கு எது பொருத்தமானதோ அதைச் செய்யுங்கள். நானும் காங்கிரஸின் சிங்க இதயம் கொண்ட வீரர்களும் நாட்டைப் பாதுகாப்போம். நாங்கள் ஒரு அங்குலம் கூட பின்வாங்க மாட்டோம். பிரதமரின் கண்களில் பயம் இருக்கிறது. அதனால்தான் பட்ஜெட் கூட்டத்தொடரின் போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியை அவர் எதிர்கொள்ளவில்லை" என்று கூறினார்.

மோடியின் விமர்சனம்: உத்தரப் பிரதேச மாநிலம் மீரட் நகரில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் ஆடையை களைந்து காங்கிரஸ் கட்சியினர் நடத்திய போராட்டத்தை கடுமையாக விமர்சித்தார். "இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச நிகழ்வை, கண்ணியமற்ற அரசியலை அரங்கேற்றும் அரங்கமாக காங்கிரஸ் கட்சி பயன்படுத்தியது. வெளிநாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் முன்பாக ஆடையை காங்கிரஸ் கட்சியினர் களைந்து நின்றனர்.

நீங்கள் அப்படித்தான் என்று நாட்டு மக்கள் அறிவார்கள். அப்படி இருக்கும்போது ஏன் உங்களது ஆடையைக் களைய வேண்டும்? இதை நான் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களிடம் கேட்க விரும்புகிறேன். இந்தியாவை அவமதித்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களின் இத்தகைய செயலுக்கு அக்கட்சியின் தலைவர்கள் வருத்தம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக உள்ளது நிலைமை. இந்தச் செயலுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியின் கூட்டணி கட்சியினர் அவர்களை விட்டு சற்று விலகி உள்ளனர்.

நீங்கள் பிரதமர் அரியணையில் அமர வேண்டுமென்றால் மக்களின் நம்பிக்கையை முதலில் பெற வேண்டும். இன்று வளர்ந்த நாடுகள் இந்தியாவுடன் இணைந்து பயணிக்க ஆர்வம் காட்டி வருகின்றன. இந்தியாவின் வளர்ச்சியில் தங்களின் எதிர்காலத்தை அவர்கள் பார்க்கிறார்கள். 21ம் நூற்றாண்டில் எதிர்கொள்ளும் சவாலுக்கு இந்தியா தீர்வு தரும் என உலகம் கருதுகிறது.

முன்னொரு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள விருப்பம் இருந்தும், அது நடக்காத ஒன்றாக இருந்தது. ஆனால், பாஜக ஆட்சியில் தேசத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது" என தெரிவித்திருந்தார்.

# ஆந்திராவில் கலப்பட பால் குடித்ததில் 4 பேர் உயிரிழப்பு

ராஜமுந்திரி, பிப்.25-
ஆந்திர மாநிலம் ராஜமுந்திரி லாலாசெருவு பகுதியில் நேற்று காலை பால்காரரிடம் பால் வாங்கிய பலருக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு, மயக்கம் ஏற்பட்டு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.



இதில் சிகிச்சை பலனின்றி 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 12 பேர் தற்போது தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இது தொடர்பாக போலீஸார் வழக்கு பதிவு செய்து பால்காரரை கைது செய்துள்ளனர்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசுகையில், "உணவு பொருட்களில் கலப்படம் செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இறந்தவர்களின் குடும்பத்துக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும். இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.10 லட்சம் நிதி உதவி அளிக்க உத்தரவிட்டுள்ளேன்" என்றார்.

இது தொடர்பாக மாநில மருத்துவத் துறை ஆணையர் வீரபாண்டியன் பேசுகையில், "லாலாசெருவு பகுதியில் வீடு வீடாக ஆய்வு நடத்தப்பட்டது. 126 பேருக்கு பால்காரர் பால் விநியோகம் செய்துள்ளார். அந்த பால் சாம்பிள் கொண்டு ஆய்வு செய்ததில் அதில் கலப்படம் இருந்தது ஊர்ஜிதம் ஆகியது. இதனை தொடர்ந்து பால்காரர் கைது செய்யப்பட்டுள்ளார்" என்றார்.

# முஸ்லிம் பெண்ணுக்கு போர்வை தர மறுத்த முன்னாள் பாஜக எம்.பி

ஜெய்ப்பூர், பிப்.25-
ராஜஸ்தானின் டோங்க் சவாய் மாதோபூர் மக்களவை தொகுதியில் இருந்து பாஜக சார்பில் கடந்த 2014 முதல் 2024 வரை 2 முறை எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் சுக்பீர் சிங் ஜானபுரியா.

இவர் தனது தொகுதியில் பொது மக்களுக்கு போர்வை விநியோகம் செய்தபோது வரிசையில் வந்த ஒரு பெண்ணிடம் அவரது பெயரை கேட்டுள்ளார். அப்பெண் முஸ்லிம் பெயரை கூறியதும் அவருக்கு போர்வை வழங்க வேண்டாம் என தனது உதவியாளரிடம் கூறியுள்ளார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சுக்பீர் சிங்கின் இந்த செயலுக்கு அத்தொகுதியின் தற்போதைய காங்கிரஸ் எம்.பி.ஹரிஷ் சந்திர மீனா கண்டனம் தெரிவித்துள்ளார். "இது நாட்டின் சமூக கட்டமைப்பை அழிக்கும் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இந்த செயல் வெட்கக்கேடானது" என்று அவர் கூறியுள்ளார்.

# ஹரியானா அரசு கணக்கில் ரூ.590 கோடி மோசடி ஐடிஎப்சி வங்கி ஊழியர்களின் பணப் பரிமாற்றம் குறித்து ஆய்வு

மும்பை, பிப்.25-
ஹரியானா அரசின் வங்கி கணக்குகளில் இருந்து ரூ.590 கோடியை ஐடிஎப்சி ஃபர்ஸ்ட் வங்கி ஊழியர்கள் மோசடி செய்தது குறித்து தடயவியல் தணிக்கை குழு ஆய்வு செய்து வருவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.




ஹரியானா அரசு தனியார் நிதி நிறுவனத்துடன் இணைந்து ஐடிஎப்சி ஃபர்ஸ்ட் வங்கியில் சில கணக்குகளை வைத்துள்ளது. இந்நிலையில் ஹரியானா அரசு வங்கி கணக்குகளில் இருந்து ரூ.590 கோடி முறைகேடு நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த 18ம் தேதி முதல் ஹரியானா அரசின் இதர நிறுவனங்களின் கணக்குகளிலும் இதுபோன்ற சிக்கல்கள் கவனிக்கப்பட்டன. இதையடுத்து ஐடிஎப்சி வங்கி நடத்திய முதல்கட்ட ஆய்வில், ஹரியானா வங்கி கிளை ஊழியர்கள் சிலருடன் கூட்டு சேர்ந்து இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளது தெரியவந்தது.இந்த மோசடி குறித்து வங்கி வாரியத்தின் சிறப்பு குழு மற்றும் தணிக்கை குழுவின் கவனத்துக்கு வங்கி நிர்வாகம் கொண்டு சென்றது. போலீசிலும் புகார் செய்யப்பட்டது. 4 பேர் பணியிடை நீக்கம் இதையடுத்து வங்கி அதிகாரிகள் 4 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது. இதர வங்கி கணக்குகளுக்கு மோசடியாக மாற்றப்பட்ட பணத்தை திருப்பி அனுப்பும் படியும் ஐடிஎப்சி ஃபர்ஸ்ட் வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில் இந்த மோசடி குறித்து ஆய்வு செய்ய 'கேபிஎம்ஜி' என்ற சர்வதேச நிறுவனத்தின் தடயவியல் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த பணிகள் முடிய 4 முதல் 5 வாரங்கள் ஆகும் எனவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. பணம் மீட்கப்படும் இந்த மோசடி குறித்த ஹரியானா சட்டப்பேரவையில் விவாதிக்கப்பட்டது.

அப்போது பதில் அளித்த மாநில முதல்வர் நயப் சிங் சைனி, " தவறு செய்தவர்கள் வங்கி ஊழியராக இருந்தாலும், அரசு ஊழியராக இருந்தாலும் தப்ப முடியாது. கடும் நடவடிக்கை எடுத்து மக்கள் பணம் மீட்கப்படும்" என்றார்.

# "அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில் நான் செய்த தவறு என்ன?" ஓபிஎஸ் ஆவேசம்

போடி, பிப்.25-
"என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில், நான் என்ன தவறு செய்து விட்டேன்? அந்த உண்மையைச் சொல்லுங்கள்... நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன்" என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆவேசமாக தெரிவித்துள்ளார்.



முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு போடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ஓபிஎஸ் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: "ஜெயலலிதா இறந்த பிறகு எனக்கு முதல்வராவதில் விருப்பமில்லை. ஆனால், என்னை கட்டாயப்படுத்தி முதல்வர் ஆக்கினார்கள். அதன் பிறகு, என்னை பல்வேறு வகையிலும் அவமானப்படுத்தி முதல்வர் பதவியில் இருந்து வெளியேற்றினார்கள்.

ஒவ்வொரு முறையும் எதிர்க்கட்சியில் இருந்தாலும், ஆளுங்கட்சியிலும் இருந்தாலும் ஆட்சி முடிந்ததும் அனைவருக்கும் வாழ்த்து சொல்வது எனது மரபு. அந்த அடிப்படையிலே திமுக ஆட்சிக்கு வாழ்த்து தெரிவித்தேன். ஆனால் நான் திமுகவுக்கு ஆதரவு தெரிவிப்பதுபோல கருத்து பரவிவிட்டது. டிடிவி தினகரன் என்னை பசுத்தோல் போர்த்தியப் புலி என்று கூறியுள்ளார்.

அரசியல் நாகரிகம், பண்பாடு கருதி நான் கடின வார்த்தைகளை பயன்படுத்துவது இல்லை. நான் நினைத்தால் அவரை விட மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி கருத்து கூற முடியும். நான் இனி சங்கர மடத்துக்கா செல்ல முடியும்?

என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில், நான் என்ன தவறு செய்து விட்டேன்? அந்த உண்மையைச் சொல்லுங்கள்... நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன்.

திமுக பலமான கூட்டணியில் உள்ளது. ஆகவே, அவர்களை வெல்ல அதிமுகவினர் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றுதான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

நான் போடி தொகுதியில் போட்டியிடுகிறேனா என்று ஆண்டவனுக்கு தான் தெரியும். தனிக்கட்சி தொடங்க மாட்டேன். எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகியோர் அதிமுக கட்சியில் வகித்த சட்ட விதிமுறைகளை மீண்டும் கொண்டு வரும் வரை அதிமுகவுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டே இருப்பேன்" என்றார் ஓபிஎஸ்.



## பெரியஊர் சேரிகிராமத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழா

அலங்காநல்லூர். பிப்.25-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில், முன்னாள் முதலமைச்சரும், அதிமுக முன்னாள் பொதுச் செயலாளர் ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திரு உருவ படத்திற்கு அ.தி.மு.க கிளைக் கழகத்தின் சார்பாக மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.
இந்நிகழ்ச்சியில் ஒன்றிய எம்.ஜி.ஆர் இளைஞரணி இணைச்செயலாளர் செந்தில்குமார் ,கிளைக்கழக செயலாளர் சந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி,ஒன்றிய விவசாய அணி துணை செயலாளர் பாலமுருகன்,ஆறுமுகம், வீரணன், குமரேசன், ஞானசேகரன், பக்கிரி மொகம்மது, கோவில்பிச்சை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## கோடை விடுமுறை விரைவு ரயில் டிக்கெட் முன்பதிவு தொடங்கியது




சென்னை, பிப்.25-
கோடை விடுமுறையை முன்னிட்டு, விரைவு ரயில்களில் டிக்கெட் முன்பதிவு தொடங்கியுள்ளது. தென் மாவட்ட விரைவு ரயில்களில் பயணிகள் விறுவிறுப்பாக முன்பதிவு செய்கின்றனர்.
நடப்பு கல்வியாண்டில் இறுதி தேர்வுகள் அடுத்த மாதத்தில் தொடங்கி, ஏப்ரல் 2வது வாரத்தில் முடியும். அதுபோல, கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிந்து பிறகு, கோடை விடுமுறை அறிவிக்கப்பட உள்ளது.
சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களில் வசிப்போர், சொந்த ஊர்களுக்கும், சிலர் சுற்றுலா இடங்களுக்கும் செல்வார்கள். இந்நிலையில், கோடை விடுமுறையில் ரயிலில் வெளியூர் பயணம் செய்ய திட்டமிட்டுள்ள பொதுமக்கள் முன்பதிவு செய்ய தொடங்கியுள்ளனர்.
இதுகுறித்து,தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: இந்த ஆண்டு கோடை விடுமுறையில் சொந்த ஊர், சுற்றுலா தலங்களுக்கு செல்ல முன்பதிவு செய்கின்றனர். விரைவு ரயில்களில் பயணிக்க, 60 நாட்களுக்கு முன்பாக முன்பதிவு செய்யும் வசதி இருப்பதால், ஐஆர்சிடிசி இணையதளம் மற்றும் ரயில் நிலைய டிக்கெட் கவுன்ட்டர்கள் மூலமாக முன்பதிவு செய்கின்றனர்.
குறிப்பாக, பயணிகள் தேவை அதிகமாக உள்ள தென்மாவட்ட விரைவு ரயில்களில் பயணிகள் ஆர்வமாக முன்பதிவு செய்கின்றனர். சென்னை திருச்செந்தூர், கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கொல்லம் உட்பட பெருமபாலான விரைவு ரயில்களில் வரும் ஏப்.24ம் தேதி பயணத்துக்கு, முன்பதிவு முடிந்துவிட்டது. வந்தே பாரத் உட்பட சில ரயில்களில் மட்டுமே கணிசமாக டிக்கெட்டுகள் உள்ளன.
ஒவ்வொரு நாளும் முன்பதிவு தொடங்கும் போது, பெரும்பாலான டிக்கெட்டுகள் விற்று தீர்ந்து விடுகின்றன. அதிகமாக காத்திருப்பு பட்டியல் உள்ள ரயில்கள், வழித்தடத்தை தேர்வு செய்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். இதற்கான, அறிவிப்பு அடுத்த மாதம் இறுதியில் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## ஓசூர்அரசு அலுவலர் மீது காரை ஏற்றிக் கொலை: திமுக பிரமுகர் மகன் உட்பட 3 பேர் கைது



ஒசூர், பிப்.25-
ஒசூரில் தொழிலாளர் நலத்துறை உதவி ஆய்வாளரை காரை ஏற்றிக் கொன்ற வழக்கில் திமுக மாநில செயற்குழு உறுப்பினரின் மகன் உட்பட 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.
ஒசூர் ராயக்கோட்டை வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதிக்கு அருகே உள்ள அன்னை அரவிந்தர் நகரைச் சேர்ந்தவர் சிவமூர்த்தி (54). இவர் ஒசூரில் தொழிலாளர் நலத்துறையில் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்தார்.
இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு சிவமூர்த்தி வீட்டின் முன்பு இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அப்போது, அவ்வழியாக காரில் வந்த இளைஞர்கள் சிலர் இருசக்கர வாகனங்களை எடுக்கக் கோரி தொடர்ச்சியாக காரில் ஹாரன் அடித்துள்ளனர்.
அப்போது, சிவமூர்த்தி, அவரது மகன் கிருபாகரன், இவரது 6 மாத குழந்தையுடன் மனைவி அம்சவேணி ஆகியோர் வீட்டிலிருந்து வெளியில் வந்து இருசக்கர வாகனத்தை எடுக்க முயன்றனர்.
அப்போது காரை ஓட்டி வந்த இளைஞர்கள், சிவமூர்த்தியின் குடும்பத்தினருடன் தகராறு செய்தனர். அதைத் தொடர்ந்து, ஆத்திரமடைந்த இளைஞர் காரை வேகமாக ஓட்டி சிவமூர்த்தி உள்ளிட்ட 4 பேர் மீதும் மோதினர். இதில் 4 பேரும் காயம் அடைந்தனர். அங்கிருந்தவர்கள் 4 பேரையும் மீட்டு, ஒசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். வழியில் சிவமூர்த்தி உயிரிழந்தார்.
இதுதொடர்பாக ஒசூர் நகர போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து, ஒசூர் கும்பாரப்பேட்டையைச் சேர்ந்த முன்னாள் கவுன்சிலரும், தற்போதைய திமுக மாநில செயற்குழு உறுப்பினருமான சீனிவாசனின் மகன் ஆதித்யா(24) அவரது நண்பர்கள் ரித்திக்குமார் (19), ஹரீஸ்(19) ஆகிய 3 பேரையும் கைது செய்தனர். காரையும் பறிமுதல் செய்தனர்.

## ரியல் எஸ்டேட் அதிபர் கொலை: 6 பேருக்கு இரட்டை ஆயுள் சிறை

ஒசூர், பிப்.25-
கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே கண்டகானப்பள்ளியைச் சேர்ந்தவர் லட்சுமி நாராயணா (37). மாரச்சந்திரத்தைச் சேர்ந்தவர் மகேஷ்குமார். இருவரும் இணைந்து ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.
இந்நிலையில், மகேஷ்குமாருக்கு கடனாக கொடுத்த ரூ.30 லட்சத்தைக் கேட்டு லட்சுமி நாராயணா அடிக்கடி தொந்தரவு கொடுத்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மகேஷ்குமார், 2018ம் ஆண்டு தனது நண்பர்களுடன் சேர்ந்து லட்சுமி நாராயணாவை காரில் கடத்திச் சென்று கொலை செய்து உடலை பஞ்சப்பள்ளி சாலையில் வீசிச் சென்றார்.
இதுதொடர்பாக தேன்கனிக்கோட்டை போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து, மகேஷ்குமார் மற்றும் அவரது நண்பர்களான ராஜ்குமார், வெங்கடாஜலபதி, சுரேஷ், தக்கட்டியைச் சேர்ந்த சுரேஷ், பெண்ணாகரம் ஹரிஷ், கர்நாடக மாநிலம் சூரி ஆகிய 7 பேரை கைது செய்தனர்.
இதுதொடர்பான வழக்கு ஒசூர் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில் நீதிபதி நேற்று தீர்ப்பளித்தார்.
இதில், வழக்கு விசாரணையின்போது சுரேஷ் உயிரிழந்த நிலையில், மகேஷ்குமார் உள்ளிட்ட 6 பேருக்கு தலா இரட்டை ஆயுள் தண்டனையும், தலா ரூ.20,000 அபராதமும் விதித்தார். மேலும், தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிட்டார்

## 12 மீனவர்களை கைது செய்தது இலங்கை கடற்படை



சென்னை, பிப்.25-
மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்தனர். ராமேசுவரம் அருகே பாம்பன் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 90க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.
மன்னார் வளைகுடா பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது டேவிட் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்து, படகிலிருந்த கபில் ரோச்சர், ஜான்சன், ஆண்டனி, அந்தோணி அஜித், பிரின்ஸ்ரூபட், ரீகன், அந்தோணி ரூவிஸ்டன், மோசஸ், பிரிஸ்மென், கிளமண்ட், அகர்சன், பெரிய கருப்பன் ஆகிய 12 பேரை கைது செய்தனர்.
கைது செய்யப்பட்ட படகையும், 12 பேரையும் இலங்கையிலுள்ள நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்துக்கு கொண்டு சென்று அந்நாட்டு மீன்வளத் துறையினரிடம் ஒப்படைத்தனர்.
விசாரணைக்கு பிறகு 12 பேர் மீதும், எல்லை தாண்டி மீன் பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் நீர்கொழும்பு சிறையில் அடைக்கப்பட்டனர்.
முதல்வர் ஸ்டாலின் கடிதம்: இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது: பாம்பன் மீன்பிடி இறங்கு தளத்திலிருந்து, இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற ராமேசுவரத்தைச் சேர்ந்த 12 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 22ம் தேதி இரவு கைது செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
தற்போதைய நிலவரப்படி, தமிழகத்தைச் சேர்ந்த 259 மீன்பிடி படகுகளும், தற்போது கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 116 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளனர். இந்த கைது நடவடிக்கைகள், மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து பதற்றத்தைஏற் படுத்தியுள்ளது.
இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழக மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், இலங்கை சிறையில் காவலில் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிப்பதற்கு தூதரக நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும். இவ்வாறு கடிதத்தில் முதல்வர் கூறியுள்ளார்.
செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு: மீனவர்கள் கைது தொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘கடந்த 2 நாட்களுக்கு முன் பிரதமர் மோடியை இலங்கை அதிபர் சந்தித்துப் பேசினார்.
அப்போதுகூட தமிழக மீனவர்கள் கைது விவகாரம் குறித்து பேசியதாகத் தகவல் இல்லை. கைது செய்யப்பட்டிருக்கும் அனைத்து மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்க, பாஜக அரசு உடனே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்’’ என்று கூறியுள்ளார்.
ஜி.கே.வாசன் கோரிக்கை: தமாகா தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்ட அறிக்கையில், ‘‘இலங்கை கடற்படையால் 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும். எனவே, மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு இலங்கை அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி மீனவர்களை மீட்க வேண்டும். தமிழக அரசும் மீனவர்களின் வாழ்வாதாரத் தைப் பாதுகாக்க வேண்டும்’’ என்று கூறியுள்ளார்.

## மத்திய உள்துறை சார்பில் தேசிய தீவிரவாத எதிர்ப்பு கொள்கை வெளியீடு




புதுடெல்லி, பிப்.25-
மத்திய உள்துறை சார்பில் தேசிய தீவிரவாத எதிர்ப்பு கொள்கை வெளியிடப்பட்டு உள்ளது.
மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட தேசிய தீவிரவாத எதிர்ப்பு கொள்கையில் கூறியிருப்பதாவது: சில அண்டை நாடுகள் தீவிரவாதத்தை நாட்டின் கொள்கையாக கடைப்பிடித்து வருகின்றன. இதனால் இந்தியா பாதிக்கப்படுகிறது. எனினும் தீவிரவாதத்துக்கு எதிராக மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக பிரஹார் (பிரிகிபிகிகிஸி) என்ற தேசிய தீவிரவாத எதிர்ப்பு கொள்கை வெளியிடப்படுகிறது.
இதன்படி தீவிரவாத தாக்குதல்களை முன்கூட்டியே தடுத்து இந்திய மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். தீவிரவாத தாக்குதல்களின்போது அதிவிரைவாக பதிலடி கொடுக்கப்படும். தீவிரவாதத்துக்கு எதிராக அரசின் அனைத்து துறைகளும் இணைந்து செயல்படும். தீவிரவாத அச்சுறுத்தல்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகள், சட்ட உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் தீவிரவாதம் வேரறுக்கப்படும். தீவிரவாதத்துக்கு எதிராக உலக நாடுகளுடன் இந்தியா ஒன்றிணைந்து செயல்படும். தீவிரவாதத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் விரைந்து மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். அல்காய்தா, ஐஎஸ் உள்ளிட்ட தீவிரவாத குழுக்களால் இந்தியாவுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் நீடிக்கிறது.
இந்த குழுக்களை சேர்ந்த தீவிரவாதிகள் அந்நிய மண்ணில் பதுங்கியிருந்து இந்தியாவுக்கு எதிரான நாசவேலைகளில் ஈடுபடுகின்றனர். இதற்கு சில அண்டை நாடுகளும் துணைபோகின்றன. தீவிரவாதிகளுக்கு அண்டை நாடுகளில் இருந்து ட்ரோன்கள் மூலம் ஆயுதங்கள் விநியோகம் செய்யப்படுகிறது. இதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!

சென்னை, பிப்.25-
இந்திய அளவில் நடைபெற்ற நடப்பு கல்வியாண்டிற்கான இந்தியப் பொறியியல் நுழைவுத் தேர்வில் (JEE) தமிழ்நாடு அரசுப் பள்ளி மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளை சேர்ந்த 448 மாணவ, மாணவியர்கள் உயர் மதிப்பெண்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.
இச்சாதனையை பறைசாற்றும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டது பின்வருமாறு,
கல்வியால் சிறக்கும் நமது அரசுப் பள்ளி மாணவர்களைச் செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் இடம்பெற வைத்துப் பூரிப்படைகிறோம்.
2021-22இல் கல்வியில் பின்தங்கிய 10 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட மாடல் பள்ளிகள், இன்று 38 மாவட்டங்களிலும், தலா ரூ.50 கோடி மதிப்பீட்டில் 800 மாணவர்களுக்கான உறைவிட, உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.
அதனால்தான், கடந்த 4 ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 2,358 மாணவர்களும், ஆதி திராவிடர் (37) மற்றும் பழங்குடியினர் (169) பள்ளிகளைச் சேர்ந்த 206 மாணவர்களும், 93 முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில், 50 துறைகளில் மேற்படிப்பு பயிலுகின்றனர். அதில் 41 பேர் IITகளிலும், 22 பேர் முழு உதவித்தொகையுடன் வெளிநாடுகளிலும் பயில்கின்றனர்.
இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு ஐஐடியில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 448 மாணவர்களும் ஆதி திராவிடர் (13) மற்றும் பழங்குடியினர் (55) பள்ளிகளைச் சேர்ந்த 68 மாணவர்களும் வெற்றிகரமாகக் கடந்துள்ளனர்.
பெரும்பாலும் முதல் தலைமுறையினராகக் கல்விச் சாலைக்குள் நுழைந்த இந்த மாணவர்களின் கனவுகளை அடைவதற்குத் துணை நிற்கின்ற பெருமையோடு, இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இன்னும் பலர் கல்வியைக் கைப்பற்றிக் கொண்டு, உன்னதமான உயரங்களை வாழ்வில் அடைந்திட வாழ்த்துகிறோம்!"


## சூடாகும் தேர்தல் களம்… சுத்துப் போடத் தயாராகும் பாஜக



சென்னை, பிப்.25-
வாரிசுகளுக்கு வாய்ப்புக் கேட்டு வரிசை கட்டி நிற்கும் தலைவர்கள், தமது ஆதரவாளர்களுக்காக இப்போதே தொகுதிக்கு 'துண்டு' போட்டு வைக்கும் மூத்த முன்னோடிகள், கூடுதல் இடங்களைக் கேட்டு குடைச்சல் கொடுக்கும் கூட்டணித் தோழமைகள் என அண்ணா அறிவாலயத்தில் பறக்கும் அனலுக்கு மத்தியில் பாஜகவும் தன் பங்கிற்கு திமுகவுக்கு எதிரான விவகாரங்களை தூசு தட்டி எடுத்து குடைச்சல் கொடுக்கத் தயாராகி வருகிறது.
கடந்த 2011 சட்டப்பேரவைத் தேர்தலில் கொளத்தூர் தொகுதியில் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினும், அதிமுகவின் சைதை துரைசாமியும் மோதினர். சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்டாலின் வெற்றி பெற்றார். இதை எதிர்த்து சைதை துரைசாமி உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்தார். ஆனால், “ஸ்டாலினுக்கு எதிரான புகார்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை” எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம். இதை எதிர்த்து சைதை துரைசாமி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.
ஆண்டுக் கணக்கில் நிலுவையில் இருந்த இந்த வழக்கின் இறுதிக்கட்ட விசாரணை அண்மையில் முடிக்கப்பட்டு தேதி குறிப்பிடாமல் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றமும் ஸ்டாலினுக்கு நிம்மதி தரும் விதமாகவே மனுதாரர் தரப்பை கேள்வி எழுப்பி இருந்தாலும், தேர்தல் நேரத்தில் இந்த வழக்கின் தீர்ப்பு எப்படிப் போகுமோ என்ற கவலை அறிவாலயத்தை வதைத்துக் கொண்டிருக்கிறது. ஸ்டாலினுக்கு எதிரான வழக்கு என்பதால் பாஜக மேலிடமும் இதை உன்னிப்பாக கவனித்து வருகிறது.
இதேபோல், அமைச்சர் கே.என்.நேருவைச் சுற்றியும் சர்ச்சைகள் வட்டமடிக்கின்றன. நகராட்சி நிர்வாகத்தில் பணியிடங்களை நிரப்புவதில் நேரு தரப்பில் லஞ்சம் பெறப்பட்டதாக கடந்த 2025ல்அமலாக்கத் துறை தமிழக டிஜிபிக்குக் கடிதம் அனுப்பியது. அதன் அடிப்படையில், நேரு மற்றும் அவரது சகோதரர் மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி அதிமுக வழக்கறிஞர் அணி செயலாளர் இன்பதுரை வழக்குத் தொடர்ந்தார்.
இதை விசாரித்த நீதிமன்றம், "அமலாக்கத்துறை வழங்கிய ஆதாரங்களில் முகாந்திரம் உள்ளதால், தாமதமின்றி லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும்" என உத்தரவிட்டது. வழக்குப் பதிவானால் கொஞ்சமும் தாமதிக்காமல் மத்திய அரசின் அமலாக்கத்துறை தங்களைத் தேடி புறப்பட்டு வந்துவிடும் என்பதால் நேரு முகாமும் இப்போது உச்சகட்ட உதறலில் இருக்கிறது.
இந்த நெருக்கடிகள் குறித்து மதுரையில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "நாங்கள் பார்க்காத மிசாவா, தடாவா? ஆட்சி, பதவி ஏன், உயிரே போனாலும் கவலைப்பட மாட்டோம். எதிர்க்கட்சிகளிலேயே திமுகவினர் மீதுதான் அதிகமான ரெய்டுகள் நடக்கின்றன. சிபிஐ, இடி, ஐடி என எந்தச் சித்து விளையாட்டுக்கும் நாங்கள் அஞ்ச மாட்டோம்" என ஆவேசமாக முழங்கினார்.
இது குறித்து நம்மிடம் பேசிய திமுக செய்தித் தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், "மக்கள் மத்தியில் திமுகவுக்கு எதிரான எதிர்ப்பு அலை இல்லை. எனவே,செயற்கையான காரணங்களை உருவாக்கி பாஜக அரசியல் ஆதாயம் தேட முயல்கிறது. மக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்.
பாஜக செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதியோ, "எல்லாவற்றிற்கும் பாஜகதான் காரணம் எனச் சொல்வது தவறு. நீதிமன்றத்தில் வழக்குகள் முகாந்திரம் இருந்தால் தான் விசாரிக்கப்படுகின்றன. திமுகவினரின் இத்தகைய பேச்சுகள் பாஜக மீதுஅவர்களுக்கு இருக்கும் பயத்தையே காட்டுகிறது" என்கிறார்.
யார் என்ன சொன்னாலும், "திமுகவை ஒழிக்க வேண்டும்" எனப் பேசி வரும் பாஜக தலைவர்கள், இந்தத் தேர்தலில் அந்தக் கட்சியை அத்தனை எளிதில் ஜொலிக்கவிட்டுவிட மாட்டார்கள் என்பதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தென்பட ஆரம்பித்துவிட்டன.




■ திண்டுக்கல் செவன்த் டே அட்வென்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளியில் ஸ்டார் ஸ்காலர்ஸ் டே, திண்டுக்கல் மாநகர துணை மேயர் ராஜப்பா தலைமையில் நடைபெற்றது. உடன் தேசிய குழந்தைகள் நல பாதுகாப்பு ஆணைய உறுப்பினர் ஜெயசுதா மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் ஜான் பிரிட்டோ மற்றும் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் புளியங்குடி முன்னாள் முதல்வர் புரட்சிதலைவி ஜெயலிதாவின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு, புளியங்குடி வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் மாவட்ட பிரதிதி நாகராஜ் தலைமையில், எம்ஜிஆர் சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த புரட்சி தலைவி ஜெயலிதாவின் உருவபடத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி இனிப்புகளை வழங்கிகொண்டாடினர். இதில் வார்டு செயலாளர்கள் தேங்காய் கடை முருகன், மகேஷ் பாண்டியன், பரமசிவம், முருகேசன், குருசாமி, கருப்பசாமி பொன்னையா, நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



■ நாதகிரி முருகன் திருக்கோவிலில் கார்த்திகை திருநாள் திருவிழா கொண்டாடப்பட்டதுதென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் வட்டம் நாதகிரி பாலசுப்பிரமணியன் திருக்கோவிலில் கார்த்திகை திருநாளன்று, முருகப்பெருமான் சப்பரத்தில் கிரிவலம் சுற்றி வந்து சுவாமி தரிசனம் செய்து ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானின் அருள் பெற்றனர்.



# உடுமலையில் தமிழக முன்னாள் முதல்வர் அம்மா ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாள் விழா

திருப்பூர்இ பிப்,25-

திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட உடுமலை நகர், உழவர் சந்தை அருகில் அண்ணா தொழிற் சங்கம் அலுவலகம் முன்பு புரட்சி தலைவி அம்மா அவர்களின் உருவப் படத்திற்கு திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் சாந்தி சீனிவாசன், உடுமலை நகர கழக செயலாளர் ஹக்கீம், நகர கழக அவைத்தலைவர் சாமி(எ) எஸ்.சிவராஜ், மாவட்ட அண்ணா தொழிற் சங்க செயலாளர் துபாய் ஆறுமுகம் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள், பொது மக்கள் கலந்துக் கொண்டனர். பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

# முனியாண்டி கோவிலில் சிறப்பு பூஜை: மக்கள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை கோலாகலமாகக் கொண்டாடிய அதிமுக

அலங்காநல்லூர். பிப்.25-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் முன்னாள் முதல்வரும், அதிமுக முன்னாள் பொதுச் செயலாளருமான ஜெயலலிதா பிறந்த நாளை முன்னிட்டு, பிரசித்தி பெற்ற

ஸ்ரீ முனியாண்டி கோவிலில் அதிமுக சார்பில், ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன் தலைமையில், நகர செயலாளர் அழகுராஜ் முன்னிலையில், சிறப்பு பூஜைகள் செய்து



பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா, அம்மா பேரவை மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், நகர இணை செயலாளர் சம்பத், அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் சுந்தர்ராஜன், நகர பொருளாளர் சுந்தரராகவன், இணைச் செயலாளர் புலியம்மாள், துணைச் செயலாளர் லதா, வார்டு செயலாளர்கள் கேபிள் பாஸ்கரன், முரளி, பாண்டியன்,மற்றும் தாமரை, வலசை சுப்பிரமணியன்,பிச்சை,உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திசையன்விளையில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணி: மனோ கல்லூரி NSS மாணவர்கள் உற்சாகம்

திசையன்விளை, பிப்.25-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரியின் NSS அணி எண் 184 சார்பில் நடைபெற்று வரும் சிறப்பு முகாமின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக வாக்காளர் விழிப்புணர்வு பேரணி சிறப்பாக நடைபெற்றது. காலை நடைபெற்ற இந்த பேரணி, கீழநந்தன் குளத்தில் தொடங்கி, நடுநந்தன் குளம் வழியாக ஆர்.சி. நந்தன்குளம் வரை ஒழுங்காக முன்னேறியது. மாணவர்கள்



“வாக்களிப்போம் – ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம்”, “ஒரு வாக்கு – ஒரு பொறுப்பு”, “18 வயது நிறைவடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்துக் கொள்ளுங்கள்” போன்ற கோஷங்களை எழுப்பி பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

பேரணியின் போது ழிஷிஷி மாணவர்கள் பதாகைகள் மற்றும் விழிப்புணர்வு பலகைகளை ஏந்தி மக்களிடம் வாக்குரிமையின் அவசியத்தை எடுத்துரைத்தனர். பொதுமக்களிடையே இந்த பேரணி நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் திசையன்விளை மனோ கல்லூரி பொறுப்பு முதல்வர் முனைவர் ஒயிட்டன் சகாயராஜ் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டினார். மேலும், நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் எஸ். பலவேச கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பேரணியை சிறப்பித்தனர். சமூக பொறுப்புணர்வை ஊட்டும் வகையில் நடைபெற்ற இந்த வாக்காளர் விழிப்புணர்வு பேரணி, NSS சிறப்பு முகாமின் முக்கிய நிகழ்வாக அமைந்தது.



■ முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு, நெல்லை மாவட்டம் திசையன்விளை பழைய பேருந்து நிலையம் அருகில், அதிமுக அமைப்பு செயலாளர் ஏகே சீனிவாசன் தலைமையில், ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு மலர் தூவி தொண்டர்கள் மரியாதை செலுத்தினர். தொடர்ந்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. விழாவில் கலந்துகொண்ட வந்த பெண்களுக்கு நலத்திட்ட உதவியாக சேலைகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் திசையன்விளை பேரூராட்சி தலைவர் ஜான்சிராணி, துணைத் தலைவர், வி பி ஜெயக்குமார், கவுன்சிலர்கள் பிரதீஷ் குமார் முத்துக்குமார், பிரேம்குமார் , சண்முகவேலு ( எ) ஐயாகாகுட்டி, அதிமுக பிரமுகர்கள் லிங்கதுரை , இராஜசேகர் , ஜேசுராஜன் பாலமுருகன் , கார்மேகம் , நாட்டாமை உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# புளியங்குடியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்த நாள் விழா

புளியங்குடி, பிப். 25-

தென்காசி அதிமுக வடக்கு மாவட்ட கழகம் சார்பில் முன்னாள் முதல்வர் புரட்சி தலைவி ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு, செயலாளர் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினமான கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பா அறிவுறுத்தலின்படி, புளியங்குடி நகர செயலாளரும், முன்னாள் நகரமன்ற தலைவர் சங்கர பாண்டியன் தலைமையில், புளியங்குடி பழைய மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள எம்ஜிஆர் சிலைக்கும், தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட புரட்சித்தலைவி ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கும் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, இனிப்புகள் வழங்கிகொண்டாடினர்.

அதிமுக கழகப் பொறுப்பாளர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 692 மனுக்கள் குவிந்தன

தென்காசி, பிப்.25-

தென்காசிமாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 692 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து



நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை பண்ணைத்தொழில் அமைப்பது குறித்து 20 நாட்கள் நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சியில் பங்கு பெற்ற 23 விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவி பால், இ.ஆ.ப.,, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ஆ.கோயில்ராஜா, மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) நம்பிராயர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முத்துராமலிங்கம் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கத்தின் புதிய மாநில தலைவர் சென்னையில் பிப்.28ல் பதவியேற்பு

சென்னை, பிப். 25-

தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கத்தின் புதிய மாநில தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பி.ஜெ.ரவிக்குமார், வரும் சனிக்கிழமை (28.02.2026) அன்று எழும்பூரில் உள்ள ஹோட்டல் கிங்ஸ் (தாமரை ஹால்) வளாகத்தில் முறைப்படி பதவி ஏற்க உள்ளார்.



*முக்கியப் பங்கேற்பாளர்கள்:*

இந்த விழாவில் தாய் சங்கமான தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில தலைவர், மேனாள் மாநில தலைவர்கள், மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

*நிர்வாகிகளுக்கு அழைப்பு:*

தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கத்தின் மாநில மையம் சார்பில் விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பினை ஏற்று, அனைத்து மாவட்ட மற்றும் சங்க நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்று விழாவினைச் சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000